
உ

சிவமயம்



அமரர்

## திருமதி. இலட்சுமிப்பிள்ளை

## கனகசபாபதி

அவர்களின்

# நினைவு மலர்

**31 - 08 - 1997**

உ

அமரர்

# திருமதி இலட்சுமிப்பிள்ளை கனகசபாபதி

அவர்கள்



தோற்றம்: 03 - 06 - 1932

மறைவு: 17 - 07 - 1997

## திதி வெண்பா

ஆண்டி சூரஆடி ஆனதொரு பூர்வபக்கம்
பூண்ட துவாதசியிற் போயினாள் - நீண்டபுகழ்
கொண்ட இலட்சுமிப்பிள்ளை கோயிற் கடவையினில்
நின்றருளும் பிள்ளையார் நிழல்.

# வாழ்க்கை வரலாறு

அமரர் திருமதி இலட்சுமிப்பிள்ளை கனகசபாபதி துன்னாலை தாமரைக்குளத்தடியிலே திருவாளர் ஆறுமுகம் வல்லிபுரம் திருமதி செல்லாச்சி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரியாக 1932ஆம் ஆண்டு யூன் மாதம் மூன்றாந் திகதி பிறந்தார். அவருடைய உடன் பிறப்புக்கள் ஐவர் - ஆறுமுகம் (பேராசிரியர், யாழ் பல்கலைக்கழகம்), காராளசிங்கம் (இளைப்பாறிய தபால் அதிபர்), தெய்வசோதி, திரவியம், தெய்வநாயகி (ஆசிரியை, கட்டைவேலி ஞானாசாரியர் கல்லூரி).

தனது ஆரம்பக்கல்வியைக் காசிநாதர் வித்தியாலயத்திலும், ஞானாசாரியர் கல்லூரியிலும் பெற்று பருத்தித்துறை மெதடிஸ்த மிஷன் பெண்கள் பாடசாலையில் இடைநிலைக் கல்வியை நிறைவு செய்தார். அக்காலத்தில் நடைமுறையிலிருந்த சிரேஷ்ட பாடசாலைத்தராதரப் பத்திரத் தேர்வில் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மூலங்களிலும் தேர்ச்சி பெற்றுச் சிறப்பெய்தினார்.

ஆசிரியர் தொழிலில் நாட்டங்கொண்டவராய் திருநெல்வேலி சைவ ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் சேர்ந்து பயிற்சி பெற்றுத் தகமை கொண்டார். தனது ஆசிரியர் பணியில் ஞானசாரியர் கல்லூரி கரவெட்டி, வட இந்து மகளிர் கல்லூரி பருத்தித்துறை வட மத்திய கல்லூரி நெல்லியடி, ஹலெண்ட் கல்லூரி, ஹற்றன், சைவப்பிரகாச வித்தியாசாலை, கந்தர்மடம் ஆகிய கல்லூரிகளில் கற்பித்துப் பெருமைபடைந்தார்.

இல் வாழ்க்கைக்கு ஏற்ற துணைவனாய் கந்தர்மடத்தைச் சார்ந்த திரு வைத்திலிங்கம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரன் திரு கனகசபாபதியை கைப்பற்றினார். அவருக்கு கிடைத்த துணையும் ஆசிரியத் தொழிலும் இருந்தமை குடும்பத்துக்கு சிறப்பாயமைந்தது தாம்பத்திய வாழ்வின்

பேறுகளாய் ஸ்ரீ சுதர்சன் (பொறியியலாளர் - அவுஸ்ரேலியா), குமணன் (பொறியியலாளர் - அவுஸ்ரேலியா), சசிகரன் (படவரைஞர் - பிரான்ஸ்) என்ற மூன்று புதல்வர்களும், நிர்மதா என்ற புதல்வியும் அமைந்தனர். அத்துடன் கலாநிதி உமா, நளினு, காமேசன் என்ற அரிய மருமக்களையும் ஆதவன், ஆருதி, சங்கவி, திருஷா, வாஷினி என்னும் பாசமுள்ள பேரப்பிள்ளைகளையும் அடையப் பெற்றார். அன்னை என்ற வகையில் திருமதி. இலட்சுமிப்பிள்ளை நிறைவேற்றிவைத்த கடமைகளுக்கு அவருடைய பிள்ளைகளின் வளர்ச்சி சான்றாகின்றது.

ஆசிரியத் தொழிலுக்குத் தம்மை அர்ப்பணித்த அதே வேளையில் தனது குடும்பம், சூழல், சமூகம் என்ற வெவ்வேறு களங்களிலும் அவருடைய பங்களிப்பு பளிச்சிட்டது. தன்னை அடைந்தவர்கள் அனைவரையும் அரவணைத்து ஆதரிப்பதிலும், தேவையான சந்தர்ப்பங்களில் தேறுதல் கூறுவதிலும் அவருடைய தனித்துவம் பலராலும் பாராட்டப்பட்டது. அவரிடம் கற்ற மாணவர்கள், கூடத் தொழில் புரிந்த சகபாடிகள், தொடர்புடைய ஏனையோர் எல்லோருடனும் ஒத்து வாழ்ந்து திருப்திகண்டவர்.

தனது வாழ்வில் நிதானத்தைக் கடைப்பிடித்த திருமதி இலட்சும்ப்பிள்ளைக்குக் காலனின் அழைப்புத் திடீரென வந்தது. எவருமே எதிர்பார்த்திராத வகையில் 17-07-97ல் அவர் இறைவனடி எய்தினார். மானிட வாழ்க்கையின் அநித்தியத்தை நிருப்பதாக அவருடைய மறைவு நிகழ்ந்தது. பிரிவால் துயருறுபவர்கள் தனித்துநிற்க பரம்பொருளின் பாதத்தை நாடிய ஜீவன் முத்தியெய்யட்டும்.

சாந்தி சாந்தி சாந்தி

## கணவர் புலம்பல்

காரியங்கள் அத்தனைக்கும் கைகொடுத்த தேவி நீ
யாருமிங்கே யில்லாமல் மகளடியில் பிரிந்தீரே
பாரமிதயத்தில் இறக்கவழி யில்லை யெல்லோ
ஈரமின்றி யெம்மைவிட்டுப் போனதென்ன ஐயையோ

நேரந்தான் உந்தனுக்குப் பொன்னாச்சே யென்றுமே
நேரத்தை வீணாக்க விரும்பாத பெண்ணெல்லோ
நேரத்துக் கோடோடி மறைவதோ உன்சித்தம்
நேரமோ வந்ததிங்கே நிழலடிதான் காட்டவென்று

## பிள்ளைகள் புலம்பல்

அம்மைக் கொருதெய்வம் அம்மா வுன்விளையாட்டு
நம்மைக் கருதாது நமைப்பிரிந்து போனீரோ
அம்மைபே யுன்னொளிதான் எம்மிடத்தில் வாழுமம்மா
அம்மாவுன் னுயிரெங்கே யோடியது சொல்லய்யா.

பிரிவே நமக்காச்சு பேதலிந்து நிற்கின்றோம்
பிரிவே கிடையாதோ தறவிட்டுப் போனீரோ
புரியாத புதிரானாய் புண்ணியத்தின் சொத்தானாய்
கரையாத இதயங்கள் கரையவைத்தாய் அம்மா நீ

உயிராகப் போற்றி வளர்த்தெடுத்த அம்மையே
உயிரோடு உணர்வோடு ஒன்றித்த தெய்வமே
உயிருக் குயிராய் நாம் நேசித்தோம் எய்தாயே
உயிர்பிரிந்து போனதென்ன ஏக்கமோ எமக்கிங்கே.

## சகோதரர்கள் புலம்பல்

அக்கா வெமக்கென்றும் கண்ணான சொத்தென்று
தக்க பெருமையிலே தங்கியே நாமிருந்தோம்
உக்கி உதிரவிட்டு ஓடிப்பறந்த தென்ன
ஏக்கம் ஒழியவில்லை எங்கலக்கம் தீரவில்லை.

அக்காவைக் காண்பமென்று கூட்டிக் கழுவியெல்லோ
தப்பாமல் காத்திருந்தோம் தங்கமுகம் காணவென்று
அக்கா நீ மறந்தாயோ எங்களை நீ யென்றுமே
உப்பிட்ட பாத்திரமாய் உக்குகிறோம் அக்கா நாம்.

## மருமக்கள்

அன்புள்ள மாமியாய் எமைக்காத்த தெய்வமே
அன்புக் கவசம் உடைந்ததே ஆறவழி
என்பும் உருகுதெல்லோ எல்லோர்க்கும் முத்தெல்லோ
பண்பின் சிகரமே பறந்தவழி சொல்மாமி

அறிவுபுகட்டி மெய்மை வாழவிட்ட தெய்வமே
அறிவிழந்து நிற்கின்றோம் சுருதி மூலைக் காணவில்லை
பொலிவிழந்த மாளிகையாய் போனதெல்லோ வீடின்று
வலுவிழந்து நிற்கின்றோம் வேதனை தீராதோ.

## சுற்றத்தார் புலம்பல்

எங்களிடக் கோடி வருவா யென்று
தங்கியே பார்த்திருந்தோம் தவித்தோம் அம்மா
உங்கள்முகம் காணக் கிடையா தென்று
ஓங்கியே உருகினோம் செய்தி கேட்டு.

கொள்ளிக்குப் பிள்ளைகள் வேணும் என்று
எல்லையிலே உயிர்பறக்க நேர்ந்ததோ அம்மா
கொள்ளை யடித்தானோ கோயிற் கடவையான்
கள்ளம் அறியாத பிள்ளைநீ சொல்லம்மா.

## தேற்றம்

சேவையிலே சிறப்புற்று விளங்கிய
திருமதி இலட்சுமியம்மா கனகசபாபதி
அவர்களின் திடீர் மறைவுச் செய்தி
கேட்டு அனைவரும் கலக்க மடைந்தோம்
தெளிவடைந்து அவரின் ஆத்மசாந்திக்காகப் -
பிரார்த்திப்போம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

ஆக்கம்:- திருமதி. பத்தினிப்பிள்ளை வல்லிபுரம்

## எங்கள் பெரியமச்சாள்.

"நெருநல் உளனொருவன் இன்றில்லை எனும்
பெருமை உடைத் திவ்வுலகு"

உங்கள் குடும்பத்தில் மூத்த மகளாகப் பிறந்தீர்கள். எங்கள் குடும்பத்தில் மூத்த மருமகளாகப் புகுந்தீர்கள். உங்கள் கணக்கான பேச்சும், எதையும் கணக்கிட்டுச் செய்யும் போக்கும், எதிலும் அதிகம் தலையிடாத பாங்கும், எங்களுக்கு உங்கள் மீது மதிப்புக் கலந்த அன்பை ஏற்படுத்தியது.

எதையும் திட்டம் போட்டுச் செய்வீர்கள் சொல்வதைத் திடமாகக் கூறுவீர்கள். கணக்காக மூன்று ஆணும், ஆசைக்கொரு பெண்ணும் பெற்றீர்கள் உங்கள் பிள்ளைகளின் படிப்பு, அவர்களின் எதிர்கால வாழ்வின் சுபிட்சமே உங்கள் இலட்சியமாகக் கோடிட்டு அமைத்தீர்கள் கோயில் கொண்டாட்டம், உறவினர், நண்பர் என்று உங்கள் சிந்தனையைச் சிதறடிக்காமல், மக்களை மையமாக வைத்து உங்கள் வாழ்க்கையை அமைத்தீர்கள்.

மச்சாள்! ஒரு குடும்பத் தலைவி என்ற முறையில் நீங்கள் எதைச் செய்யவில்லை! போற்றி வளர்த்த பிள்ளைகளைப் பொறியியலாளர் ஆக்கவில்லையா! பட்டம் போற் பறந்து திரிந்த மகனைப் பட்டதாரியாக்கவில்லையா? "A/L எடுத்தால் ஒரு முறை பட்டும்" என்று சவால் விட்ட மகளை மனையியல் புகட்டி, மணமேடை ஏற்றி அவர் மனைநலம் கண்டு மகிழவில்லையா?

கணக்கான வயதிலேயே ஏற்ற கன்னியரைக் கைப்பிடித்து. மக்கள் அழகான பேரக்குழந்தைகளுடன் வாழ்வதைக் கண்டு களிக்கவில்லையா? பெற்றது நீங்களென்றாலும் வளர்த்தது உங்கள் தங்கையர் என்று கூறி அவர்களிடம் நன்றி உணர்வுடன் இருக்கப் பிள்ளைகளைப் பழக்கவில்லையா?

மச்சாள்! நீங்கள். உங்கள் குடும்பத்தினரை மட்டு மன்றி புகுந்த வீட்டில் மாமன், மாமி, மைத்துனர், மைத்துனியர் மருமக்கள். மக்கள் மீது மதிப்பும், அன்பும் பாராட்டி நடந்தீர்கள் நாங்களும் எங்கள் "பெரிய மச்சாள்" என்று அன்பும் மதிப்பும் கொடுத்து நடந்தோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் அவுஸ்ரேலியாவில் மகிழ்ந்திருந்த வேளை பிறந்த ஊர் திரும்ப அவசரப்பட்டீர்கள் எதையும் கணக்கிட்டுச் செய்யும் நீங்கள் "1997-ம் ஆண்டு ஆடி மாதத்தின் பின் இருக்கமாட்டேன்" என்று கூறிப் பிறந்த மண்வர முயற்சி செய்தீர்கள். உங்கள் மரணம் கூட உங்கள் கணக்குத் தவறாது சம்பவித்து விட்டதே! அதுவும் உங்கள் பாக்கியமே.

மச்சாள்! நாங்கள்தான் ஏமாந்து விட்டோம். யாழ் வரப் போகிறீர்கள் என்று நாள் எண்ணிக் காத்திருந்தோம். எதிர்பாராத உங்கள் மரணச் செய்தி கேட்டுத் திடுக்கிட்டோம்! திகைத்தோம்!! இறுதியாகக்கூட உங்கள் முகத்தைக் காணமுடியாத எமது நிலையை எண்ணித் தவித்தோம்.

"பெரியமச்சாள் இறந்து விட்டா" நம்பமுடியவில்லை. அரைமணிக்கொருமுறை பஸ் ஓடும் காலத்திலும் நடந்து யாழ் நகர் போவீர்கள். "பஸ் அடிக்கடி ஓடுதே பஸ்களில் போகலாமே" என்று நாம் கேட்டால் "எனக்கதுக்கு மினக்கெட நேரமில்லை" என்பீர்கள். இப்பவும் இங்கு மினக்கெட முடியாமலா அவசரப்பட்டு ஓடி விட்டீர்கள்!

ஆன்மா அழியாதென்று அன்றெனக்குச் சொன்ன மொழி நான் மறந்து போவேனோடி - கிளியே.

உங்கள் ஆத்மா சாந்தியடைய நாமனைவரும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

சாந்தி!

சாந்தி!

மைத்துனர், மைத்துனிமார்,

பிள்ளைகள்.

உ

# இலட்சியத்திற்கு ஒரு இலட்சுமிப்பிள்ளை

கல்விப்பணியில் ஆசிரியராக புகுந்தோர் பலர் ஆயினும் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரே அப்பணியில் மங்கா புகழ் படைத்துள்ளனர் இவர்களுள் ஒருவர் தான் எம்மிடையே வாழ்ந்து அமரத்துவம் எய்திய ஆசிரியர் இலட்சுமிப்பிள்ளை அவர்கள்.

நேரிய நடை. சீரிய பேச்சு, எளிமையான கோலம் கொண்டவராவார் அன்னார் ஆதரவுள்ள தாயாகவும், அன்பான மனையாளாகவும் பாசமிகு சகோதரியாகவும் எம்மிடையே வாழ்ந்தாரென்றால் மிகையாகாது "பெண்ணிற் பெருந்தக் யாவுள" என்னும் பொய்யா மொழிக்கு இலக்கணமாக அமைந்தவர் எங்கள் ஆசிரியர் அவர்கள்.

1953ம் ஆண்டில் தனது க.பொ.த. உயர்தரக் கல்வியை முடித்ததும் தந்தை செழிநின்ற ஞானாசாரியார் கல்லூரியில் ஆசிரியராக தம்மை அர்ப்பணித்தவர் அமரராவார். தமது கற்பித்தல் செயற்பாடுகளாயினும் சரி சமூக செயற்பாடுகளினாயினும் சரி தந்தையார் பெயரை எம் எல்லோருக்கும் நினைவுறுத்தி செயற்பட்டவரே அன்னாராவார். அக்காலத்தில் தந்தையார் அவர்கள் பள்ளி சிறார்களின் கல்வியிலும், பாடசாலை வளர்ச்சியிலும், எமது கிராம முன்னேற்றத்திலும் அக்கறை கொண்டு அர்ப்பணிப்புடன் செயற்பட்டாரோ அதற்கு இம்மியளவும் குறையாது ஆசிரியை அவர்களும் செயற்பட்டார் என்றால் மிகையாகாது.

மேல் வகுப்புகளில் பாடங்களை கற்பிப்பதற்கான ஆற்றலை கொண்டிருந்த போதிலும் தனது கற்பித்தல் செயற்பாட்டினை ஆரம்பப்பிரிவு மாணவருடனே அக்கறை காட்டி செயற்பட்டார். ஆரம்பப்பிரிவு பொருட்காட்சியில் ஆயினும் சரி விளையாட்டு போட்டியிலாயினும் சரி

கொடுத்த கருமத்தை மனதிற்கொண்டு தன்னால் முடிந்தவற்றை சிறப்பாகச் செய்து தனித்துவம் பேணி பாடசாலைக்கு பெருமை பேணி தந்தவர் என்றால் யாரும் மறுப்பதற்கில்லை. ஆரம்ப கல்வி மேலோக்கின் மாணவரின் உயர் கல்வியும் சிறப்பாக அமையும் என்னும் எண்ணக் கருவுடன் அக் காலத்தில் எமது பாடசாலையில் ஆரம்ப கல்வியை சிறப்பாக மேலோங்கச் செய்த ஆசான்களுள் அன்னாரும் ஒருவராவார்.

வீட்டில் என்ன சுமை என்ன இடர் இருந்த போதும் பாடசாலை வாயிலினுள் புகுந்ததும் அவற்றையெல்லாம் மறந்து பாடசாலை செயற்பாடுகளில் தம்மை முற்றாக ஈடுபடுத்தி சிறார்களை ஊக்கப்படுத்தி அவர்களின் கல்வியை மேலோங்கச் செய்தார் கீதையில் கண்ணன் கூறும் "கடமையைச் செய் பலனை எதிர்பாராதே" என்னும் உபதேசப்படி அவர் பதவிகளை விரும்பியதில்லை. பதவிகளைக் காட்டிலும் மாணவர்களுக்கான கற்பித்தல் செயற்பாட்டிலேயே தன்னை அர்ப்பணித்தார்.

கல்வி, அறிவு, ஒழுக்கங்களில் சிறந்து விளங்கிய இவர் எமது பாடசாலை மாண்புமிக்க ஆசிரியர்களால் மதிக்கப்பட்டதுடன், மாணவர்களாலும் பெரிதும் மதிக்கப்பட்டார். பாடசாலை சுமைகள் இருந்த போதும் மெய்வருத்தம் பாராது செவ்வனே இல்லறம் நடாத்தி மாண்புறு மக்களையும் ஈடேற்றி நற்பண்பு எய்திய இலட்சுமிப்பிள்ளை அவர்கள் நம்மவர்க்கு ஓர் இலட்சியமாகத் திகழ்ந்தார் என்பது வெள்ளிடைமலையாகும். பிறப்பும் இறப்பும் இயற்கையின் நியதி என்பர் இம் மண்ணில் பிறந்து நாம் செய்த நற்பணிகள் எம்மை மட்டுமன்றி எம் மக்களையும் வாழ்வில் மேலோங்க வைக்கும் அவ்வகையில் பெற்றெடுத்த நான்கு செல்வங்களையும் வாழ்வில் மேலோங்கச் செய்து எம்மை பெருமைப்படுத்தி பிள்ளைகளையும் பெருமைப்படுத்தி வாழ்வில் இன்புறவைத்த இலட்சிய தாரகை இலட்சுமிப்பிள்ளை அவர்களின் நாமம் என்றென்றும் எம் மனதில் நிலைத்து நிற்கும்.

அன்னாரை பிரிந்து துயருறும் அவர் தம் துணைவன், பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், சகோதர குடும்பத்தினர் அனைவருக்கும் ஆறுதல் கூறுவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அனைவரும் இறைவனை பிரார்த்திப்போமாக.

வாழ்க அவர் பணி
வளர்க நம் கல்லூரி.

**வே. சிவசிதம்பரம்**
(அதிபர்)
ஞானாசாரியார் கல்லூரி.



# ஞானச் சுடர்

திருமதி. இலட்சுமியம்மா கனகசபாபதி அவர்கள் ஒரு சிறந்த ஆசிரியையாக விளக்கியவர். சொல்லும், செயலும் ஒன்றுபட்ட இயல்புடையவர். உண்மையின் உறைவிடம். அன்புள்ள அன்னையாகச் சிறார்களுக்குக்கல்விபயிற்றியிருக்கின்றார். அவவிடம் முதலாம் ஆண்டிலே கல்வி கற்ற மாணவர்கள் தற்பொழுதும் 11ஆம் ஆண்டிலே கல்வி கற்றுக் கொண்டிருக்கின்றார்கள். இவரின் சேவை ஒவ்வொரு மாணவனின் இதயத்திலும் பதிந்து நிற்கின்றது. இவரின் சேவை கல்வியில் சிறந்த பெறுபேறுகளுக்கும், ஆசிரிய பரம்பரைக்கும் ஊன்றுகோலாக நிற்கின்றது. இவரின் ஆத்ம சாந்திக்காக எங்கள் கல்லூரி பிரார்த்திக்கின்றது.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

திரு. மு. சிவசிதம்பரம்
யா / ஞானாசாரியர் கல்லூரி,
கரவெட்டி.



# பண்பின் பிறப்பிடம்

அமரர் திரு. ஆறுமுகம் வல்லிபுரம் அவர்கள் பல ஆண்டுகள் ஒரு உத்தம ஆசிரியராகச் சேவை செய்தவர். இவரின் தலைமகள் திருமதி. இலட்சுமிப்பிள்ளை கனகசபாபதி அவர்கள் தந்தையின் அடியொற்றி ஒரு சிறந்த ஆசிரியராகக் கடமையாற்றினார். அன்பும், ஆழ்ந்த அறிவும், பண்பும் உள்ள ஒரு உத்தம ஆசிரியையாகத் திகழ்ந்தவர். என்னைக் கற்பித்த ஆசிரியையாகவும், பின் சக ஆசிரியையாகவும் விளங்கியவர். பின் அதிபரான போதும் என்னை அன்புடன் வழி நடத்தியவர். ஒத்துழைத்தவர். அவவின் பண்பு மறக்க முடியாதது. 1953ம் ஆண்டிலிருந்து 1987ம் ஆண்டு வரை எங்கள் கல்லூரியோடு தொடர்புடையவராய் இருந்திருக்கின்றார். இடையில் யா / இந்து மகளிர் கல்லூரியில் சில ஆண்டுகளும், யாழ்ப்பாணத்திலும் சில ஆண்டுகளும் சேவை செய்தவர். ஐம்பத்தைந்தாவது வயதில் எங்கள் கல்லூரியிலிருந்து ஓய்வு பெற்றார்.

நேரம் தவறாது கடமையுணர்வுடன் சேவை செய்த இவர் சிறந்த அறிவுப்பொக்கிஷம். இவரின் அகல்வு எமக்கு பேரிழப்பு சேவையின் பயனாய் சிறந்த ஒளிப்பாதம் எய்திய அம்மையை நாம் என்றும் நினைவு கூருவோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி

சி. சிற்றம்பலம்
(முன்னாள் அதிபர்)
யா / ஞானாசாரியார் கல்லூரி,
கரவெட்டி.



## ஆசிரியம் அழுகிறது

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

என்ற பொய்யாமொழிக்கு புகழ் மணம் சேர்த்தவர் காலம் சென்ற ஓய்வு பெற்ற ஆசிரியை திருமதி. இலட்சுமிப்பிள்ளை கனகசபாபதி அவர்கள் என்றால் மிகையாகாது. பாடசாலை வரலாற்றில் அவர் ஆசிரியத்துவம் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒன்று; மழலைகளோடு அவரும் ஒரு மழலையாக கற்பிக்கும் ஆசிரிய வாண்மை சிறந்த ஆசிரியத்துவத்தின் வெளிப்பாடு நேரந் தவறாது பாடசாலைக்குச் செல்லல் கடமை உணர்ச்சி, கல்வி கற்பிக்கும் ஆற்றல் கவர்ந்தீர்க்கப்படும். அன்பான பேச்சு, இன்னும் இன்னோரன்ன வெளிசார் வேலைகளில் வெற்றி என்பவற்றால் தனது ஆசிரியப் பணிக்கு அழகு சேர்த்தவர். எளிமையான தோற்றம், புன்னகை அணிந்த முகம், உயர்ந்த இலட்சியங்கள் கொண்ட உள்ளம் என்பன காலஞ்சென்றவரின் காவ்ரதத்தில் வடிவமைக்கப்பட்டிருந்த மணிகள். பசிநோக்காது, கண் துஞ்சாது, மெய் வருத்தம் பாராது பெருந்தொண்டாற்றிய ஒரு ஆசிரியையாக ஆசிரிய சேவையிலும், ஒரு சிறந்த இல்லத்தரசியாக இல்லற வாழ்க்கையிலும் சிறந்து விளங்கினார்.

இவரின் மாணவியாகவும் சக ஆசிரியராகவும் இருக்க கிடைத்தது நான் பெற்ற பேறாகும். இவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம்.

சி. அன்னம்மா
(முன்னாள் ஆசிரியை)
யா / ஞானாசாரியர் கல்லூரி,
கரவெட்டி.

## தேவாரம்

தும்ம லிருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினையடாத் தெய்தும் போழ்தினும்
அம்மை யினுந் துணையைந் தெழுத்துமே.

## திருவாசகம்

வானநாடரும் அறியொணாதநீ மறையீறும்முன்
- தொடரொணாதநீ
ஏனை நாடருந் தெரியொணாதநீ என்னை
- இன்னிதாயாண்டு கொண்டவா
ஊனை நாடகம் ஆடுவித்தவா உருகி நானுனைப்
- பருகவைத்தவா
ஞான நாடகம் ஆடுவித்தவா நையவையகத் துடைய
- விச்சையே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாக்கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்ற வெஞ்
சிவனைத் திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ள
ளஞ் குளிர என்கண் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள்
மெய்யடியார்கள் விரைந்து வம்பின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி
யீசற்காட் செய்மின் குழாம் புகுந்து

அண்டங்கடந்த பொருளளவில்லதோ
ரானந்த வெள்ளப் பொருள்
பண்டுமின்று மென்றுமுள்ள பொருள்
என்றே பல்லாண்டு கூறுதுமே.

### திருப்புகழ்

பத்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தமா தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் திநிபாதா
வெற்றிவே லாயுதப் பெருமாளே.

### புராணம்

இறவாத வின்பவன்பு வேண்டிப் பின்வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டு மீண்டும் பிறப்புண்டே லுன்னை
யென்று
மறவாமை வேண்டு மின்னும் வேண்டுநான் மகிழ்ந்துபாடி
யறவாநீ யாடும் போதுன் னடியின்கீ ழிருக்க வென்றார்.



# பெருக்கல் வாய்ப்பாடு

| | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1 - 2 | 1 - 3 | 1 - 4 | 1 - 5 | 1 - 6 | 1 - 7 | 1 - 8 |
| 2 | 2 - 4 | 2 - 6 | 2 - 8 | 2 - 10 | 2 - 12 | 2 - 14 | 2 - 16 |
| 3 | 3 - 6 | 3 - 9 | 3 - 12 | 3 - 15 | 3 - 18 | 3 - 21 | 3 - 24 |
| 4 | 4 - 8 | 4 - 12 | 4 - 16 | 4 - 20 | 4 - 24 | 4 - 28 | 4 - 32 |
| 5 | 5 - 10 | 5 - 15 | 5 - 20 | 5 - 25 | 5 - 30 | 5 - 35 | 5 - 40 |
| 6 | 6 - 12 | 6 - 18 | 6 - 24 | 6 - 30 | 6 - 36 | 6 - 42 | 6 - 48 |
| 7 | 7 - 14 | 7 - 21 | 7 - 28 | 7 - 35 | 7 - 42 | 7 - 49 | 7 - 56 |
| 8 | 8 - 16 | 8 - 24 | 8 - 32 | 8 - 40 | 8 - 48 | 8 - 56 | 8 - 64 |
| 9 | 9 - 18 | 9 - 27 | 9 - 36 | 9 - 45 | 9 - 54 | 9 - 63 | 9 - 72 |
| 0 | 10 - 20 | 10 - 30 | 10 - 40 | 10 - 50 | 10 - 60 | 10 - 70 | 10 - 80 |
| 1 | 11 - 22 | 11 - 33 | 11 - 44 | 11 - 55 | 11 - 66 | 11 - 77 | 11 - 88 |
| 2 | 12 - 24 | 12 - 36 | 12 - 48 | 12 - 60 | 12 - 72 | 12 - 84 | 12 - 96 |
| 3 | 13 - 26 | 13 - 39 | 13 - 52 | 13 - 65 | 13 - 78 | 13 - 91 | 13 - 104 |
| 4 | 14 - 28 | 14 - 42 | 14 - 56 | 14 - 70 | 14 - 84 | 14 - 98 | 14 - 112 |
| 5 | 15 - 30 | 15 - 45 | 15 - 60 | 15 - 75 | 15 - 90 | 15 - 105 | 15 - 120 |
| 6 | 16 - 32 | 16 - 48 | 16 - 64 | 16 - 80 | 16 - 96 | 16 - 112 | 16 - 128 |

| | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
|---|---|---|---|---|---|---|---|
| 9 | 1 - 10 | 1 - 11 | 1 - 12 | 1 - 13 | 1 - 14 | 1 - 15 | 1 - 16 |
| 18 | 2 - 20 | 2 - 22 | 2 - 24 | 2 - 26 | 2 - 28 | 2 - 30 | 2 - 32 |
| 27 | 3 - 30 | 3 - 33 | 3 - 36 | 3 - 39 | 3 - 42 | 3 - 45 | 3 - 48 |
| 36 | 4 - 40 | 4 - 44 | 4 - 48 | 4 - 52 | 4 - 56 | 4 - 60 | 4 - 64 |
| 5 | 5 - 50 | 5 - 55 | 5 - 60 | 5 - 65 | 5 - 70 | 5 - 75 | 5 - 80 |
| 4 | 6 - 60 | 6 - 66 | 6 - 72 | 6 - 78 | 6 - 84 | 6 - 90 | 6 - 96 |
| 3 | 7 - 70 | 7 - 77 | 7 - 84 | 7 - 91 | 7 - 98 | 7 - 105 | 7 - 11 |
| 2 | 8 - 80 | 8 - 88 | 8 - 96 | 8 - 104 | 8 - 112 | 8 - 120 | 8 - 12 |
| 1 | 9 - 90 | 9 - 99 | 9 - 108 | 9 - 117 | 9 - 126 | 9 - 135 | 9 - 14 |
| 0 | 10 - 100 | 10 - 110 | 10 - 120 | 10 - 130 | 10 - 140 | 10 - 150 | 10 - 16 |
| 9 | 11 - 110 | 11 - 121 | 11 - 132 | 11 - 143 | 11 - 154 | 11 - 165 | 11 - 17 |
| 8 | 12 - 120 | 12 - 132 | 12 - 144 | 12 - 156 | 12 - 168 | 12 - 180 | 12 - 19 |
| 7 | 13 - 130 | 13 - 143 | 13 - 156 | 13 - 169 | 13 - 182 | 13 - 195 | 13 - 20 |
| 6 | 14 - 140 | 14 - 154 | 14 - 168 | 14 - 182 | 14 - 196 | 14 - 210 | 14 - 22 |
| 5 | 15 - 150 | 15 - 165 | 15 - 180 | 15 - 195 | 15 - 210 | 15 - 225 | 15 - 24 |
| 4 | 16 - 160 | 16 - 176 | 16 - 192 | 16 - 208 | 16 - 224 | 16 - 240 | 16 - 25 |

## நன்றி கூறுகிறோம்

மறைந்த எனது மனைவி, எமது அன்னை, எமது மாமி இறைபதம் அடைந்தபோது அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பியும், எம்மை ஆற்றுவித்து அந்தியேட்டி கிரியைகளிலும், சபிண்டீகரணத்திலும் கலந்து கொண்டு பல உதவிகளையும் மனமுவந்து அளித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனுதாபிகள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றிகள்.

அரச விடுதி,
விவசாயக்கல்லூரி,
வவுனியா.

இங்ஙனம்
கணவன்,
மக்கள், மருமக்கள்.

